

எமது குடும்ப விளக்காக விளங்கிய

# அமரர் திருமதி.லோகேஸ்வரி நடேசன்

அவர்களின் 180ம் நாள் நினைவுதினத்தை குறித்து வெளியிடப் பெற்ற

# நினைவு மலர்

**13.03.2010**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# அமரர் திரு.ஆறுமுகம் நடேசன்

## அவர்கள்

(ஆசிரியர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# அமரர்

# திருமதி.லோகேஸ்வரி நடேசன்

அவர்கள்

மலர்வு
08.04.1941

உதிர்வு
16.09.2009

## திதி நிர்ணய வெண்பா

ஆண்டு விரோதிதனில் அலர்ந்திட்ட ஆவணி திங்கள்
பூண்ட அமரபக்க திரயோதசி திதியில்
நீண்ட புகழ் லோகேஸ்வரி இவ்வுலகை விட்டு
ஆண்டவனார் திருவடிக்கே ஆளானார் அறம் பெரிதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



யாழ்ப்பாணம் - தீவுப்பகுதி

நெடுந்தீவு 05ம் வட்டாரத்தைப்

பிறப்பிடமாகவும்

வசிப்பிடமாகவும்

உயர்சைவ வேளாண் மரபினரும்

நடேசன் அவர்களின்

அருமைத் துணைவியாருமாகிய

# அமரர் திருமதி லோகேஸ்வரி நடேசன்

அவர்களின்

சிவபதப் பேறு குறித்த

நினைவு மலர்

**13.03.2010**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

உலகமுவப்ப பல்கலை ஒளிகள் பண்புடன் பரந்த ஈழநாட்டின் இரத்தினமென யாழ்.நகர் அதன்தென்மேல் ஞாயிறு போன்று ஒளிவிளங்கும் தீவக எழிலூர் ஒன்றாம் கரமத்தை கந்தன் வாழ் நெடுந்தீவகமாகும்.

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காகவும் அன்பும் பாசமும் நிறைந்த அன்புடன் அறிவூட்டிய தந்தையாகவும் தாயாகவும் திகழ்ந்த எங்கள் அன்புத் தெய்வம் கரமத்தை கந்தன் திருத் தாள்தனில் நிலையான நித்திய ஆத்மசாந்தி பெற்றிட இந்த நினைவு மலரைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து திருத்தாள் வணங்குன்றோம்.

நன்றி





**இங்ஙனம்**

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

மங்கையர்க் கரசி வளர்வைகோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாள்தொறும் பரவப்
பொங்கழ லுருவன் பூதநா யகனால்
வேதமும் பொருள்களு மருளி
அங்கயர் கண்ணி தன்னொடு மமர்ந்த
ஆலவா யாவது மிதுவே.

## திருவாசகம்

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைந் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயை
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை ! வளர்கநம்
பக்தர்கள்! வஞ்சகர் போய் அகல
பொன்னின்செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியே முக்கருள் புரிந்து
பின்னைப்பிறவி யறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

ஆதியாய் நடுவு மாகி யளவிலா வளவு மாகிச்
சோதியா யுணர்வு மாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியாய் ஏக மாகிப் பெண்ணுமா யாணு மாகிப்
போதியா நிற்குந் தில்லைப் பொது நடம்போற்றி போற்றி

## திருப்புகழ்

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முக்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேய
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றியே வேலாயுதப் பெருமாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திருமதி லோகேஸ்வரி நடேசன் அவர்களின் வாழ்க்கை வரலாறு

ஆதிசூழ் இலங்கைத் தீவின் மணிமுடியாக அமைந்தது. யாழ்ப்பாணத் தமிழ் பட்டினமாகும். இந்து சமுத்திரத்தின் முத்து எனப்படும் ஈழநாட்டிற்கு யாழ்ப்பாணக் குடாநாடு வைரமாகத் திகழ்கின்றது. என்றால் அது மிகையாகாது யாழ்ப்பாணத்தின் தென்மேற்குத்திசையில் அழகிய சப்த தீவுகள் சிதறுண்ட முத்துக்களாய் பரந்து கிடப்பதுடன் ஒவ்வொரு தீவகமும் தனக்கென தனித்தனியாக வரலாற்றுப் பின்னணியையும் தன்னகத்தே கொண்டதாகும். இருப்பினும் இத்தீவக மக்களிடையே பண்பாட்டுப் பின்னணியையும் இறுக்கமான உறவு முறைகளும் காலம் காலமாக இருந்து வந்துள்ளன. இத்தீவகத்தில் மிகவும் தொன்மை வாய்ந்த தீவகமாக நெடுந்தீவு விளங்குகின்றது.

இத்தகைய தொன்மை வாய்ந்த நெடுந்தீவிலே புகழ் பூத்த குடும்பத்திலே பிறந்த அமரர் திரு. சின்னத்தம்பி (தபால் திணைக்களம்) இல்லறமாம் நல்லறத்தில் தனது வாழ்க்கைத் துணையாக தனது குடும்பத்திற்கு நிகரான பெண்ணின் நல்லாள் பராசக்தியை மணம் முடித்து இல்வாழ்க்கை இனிதே நடத்தி தம் மரபு அழியாச் செல்வங்களாக லோகேஸ்வரி, பாலசிங்கம் (சுகாதார திணைக்களம்) மகாதேவன் (தொலைத் தொடர்பு திணைக்களம்) சண்முகநாதன் (இலங்கை போக்குவரத்துச்சபை) தில்லைநாதன் (உதவி அரசாங்க அதிபர் பணிமனை) சிற்சபாநாயகி, கருணாமூர்த்தி (சுவிஸ்) வசந்தகுமாரி உதய குமார் (கனடா) ஆகிய நவ மணிகளை இவ்வுலகிற்கு ஈந்து போயினர். இவர்கள் யாவரும் கல்வி கேள்விகளில் நெடுந்தீவின் பெருமைக்குரியவர்களாக வாழ்ந்தமை இவர்களது சிறப்பு என்று கூறலாம்.

இவர்களுள் மூத்த பிள்ளை தான் அமரர் லோகேஸ்வரி அவர்கள் நாளொரு மேனியும் பொழுதுதொரு வண்ணமுமாக வளர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமத்துப் பண்பாட்டை பயின்று குடும்பத்தின் நற்பண்புகளைக் கடைப்பிடித்து அன்பும் அறனும் அமைந்த மழலை மொழியில் யாவருடனும் உரையாடும் பெண்ணாக உருவானார் லோகேஸ்வரி அவர்கள்.

இளம் லோகேஸ்வரி இல்லற வாழ்க்கை சிறக்க மணப்பருவம் அடைந்தக் கால் பெற்றோரும் உற்றோரும் வாழ்ந்த அக்காலத்தில் நெடுந்தீவு ஆறுமுகம் வேலாசிப்பிள்ளை தம்பதிகளின் புதல்வன் நடேசன் (ஆசிரியர்)அவர்களை கரம் பற்றி வாழ்வை இனிதே நடத்தினார். நடேசன் லோகேஸ்வரி தம்பதிகளின் இல்லற வாழ்வு சிறக்க பன்னகாபரன், ஆனந்த குமாரன் என்னும் இரு தவப்புதல்வர்களை பெற்றெடுத்தார் மூத்த மகன் பன்னகாபரன் நெடுந்தீவு கணபதிப்பிள்ளை கமலம் தம்பதியினரின் இளைய மகள் ஜெகதீஸ்வரியை கரம்பிடித்து சுபாங்கி, கௌதமன், சாம்பவி, பிரஷாத் என்னும் குழந்தைச் செல்வங்களை பேரப்பிள்ளைகளாகவும் கண்டு மகிழ்ந்தார்.

இவ்வாறு சிறப்பு வாய்ந்த குடும்பத்தின் மூத்த நட்சத்திரமாக ஒளிவிட்டுக் கொண்டிருந்த லேகேஸ்வரி அம்மையார் திடீரென எம்மை எல்லாம் ஆழாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்டமை அன்னாரது குடும்பத்திற்கு மட்டுமன்றி அவரை அறிந்த எல்லா உள்ளங்களுக்கும் பேரிடியாக அமைந்தது. இவரது திடீர் பிரிவு எம்மை எல்லாம் ஆழ்ந்த சோகத்தில் ஆழ்த்தி நெஞ்சம் புண்ணாக வைத்துள்ளது. செல்வம் அதன் அழிவு, பிறப்பு, இறப்பு, இன்பம் துன்பங்களெல்லாம் நாம் பிறக்கு முன்பெ இறைவனால் நிர்ணயிக்கப்படுகின்றது. யாம் எதையும் தீர்மானிக்க முடியாது ஆக துன்பங்களைத் தீர்ப்பவனும் இறைவனே அவன் தாழ் பணிந்து எம்மனக் கவலையை ஆற்றுப்படுத்துவதுடன் லோகேஸ்வரி அம்மையாரின் ஆத்மா கரமத்தை கந்தனின் திருவடியில் சரணடைந்து சாந்தியடையப் பிரார்த்திப் போமாக.

**நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்**

**பெருமை உடைத்திவ் வுலகு**

**ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாசமுள்ள அம்மாவுக்கு

எனது அன்பு தெய்வம் அம்மா உங்களின் பிரிவு என்னால் தாங்க முடியாது. எனக்கு அவர் அம்மாயல்ல பேசும் தெய்வம் எங்களை கடிந்துரைத்ததோ, அடித்ததோ கிடையாது. அன்பால் அரவணைத்து, பாசத்தால் வளர்த் தெடுத்த அன்னை அவள் தாய்க்குத் தாயாய் தந்தைக்கு தந்தையாக இருந்து வளர்த்த தெய்வம். சொல்லாமல் என்னை விட்டு நீர் சென்றதேனோ? உனது அன்புப் பார்வையும், அழகான புன்சிரிப்பும் என் நெஞ்சை நிறைத்து நீங்காத்துயரில் நிறுத்தி விட்டதே! என் செய்வேன்.

*மகன் - ந.ஆனந்தகுமாரன்*

## இரங்கற் செய்தி

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவரை வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் காலஞ் சென்ற அமரர் நடேசன் லோகேஸ்வரி அவர்களின் மறைவுகேட்டு அதிர்ச்சி அடைந்தேன். எல்லோருடனும் அன்பாகவும், பண்பாகவும் பேசும் நற்பண்புடயவர் நோயின் வேதனையில் அகப்பட்ட இவரை இறைவன் இவரின் துன்பத்தை கண்டு தன்னோடு சேர்த்துவிட்டார் அன்னாரை பிரிந்து நிற்கும் மக்கள் மருமக்கள் சகோதரர்கள் உறவினர்கள் அனைவருக்கும் ஆறுதல் கூறி அன்னாரின் ஆன்மாமோட்சமும் சாந்தியும் பெற அருகாமையில் இருக்கும் முருகப்பெருமானை வேண்டி நிற்கிறேன்.

ஓம் - சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இங்ஙனம்
கா.புவனேந்திரசர்மா (மணிஐயா)
மத்தி – நெடுந்தீவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்றென்றும் நினைவுகளில்

பெரியம்மா என்று அழைப்போம் ஆசையாய் - என்றும்
அயலில் இருந்து அறிவுரை சொல்வாய்
அக்கா என்று ஆறுதல் தேட ஓடினால்
ஆயிரம் வார்த்தையில் ஆறுதல் சொல்வாய்

வாதநோயில் நீர் வருந்திய போதிலும்
திடமுடன் எமக்கு ஆறுதல் சொல்வாய்
மழலை செல்வங்களை மடியில் இருத்தி
மகிழ்ந்து பல கதைகள் சொல்வாய்

எத்திசையும் புகழ்பரப்பி இருந்து விட்டு
எல்லோருடனும் அன்பாக பழகிவிட்டு
கண்ணனையும் தனியாக தவிக்கவிட்டு
சொல்லாமல் பெரியம்மா போனதெங்கே?

அயலினிலே இருந்து எமக்கு ஆறுதல் சொல்ல
இனி ஒரு பெரியம்மா எமக்கு இல்லை
அக்கா அக்கா என்று அழைத்திட
லோகா அக்கா அயலில் இல்லை

அன்னாரின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறி அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

**கோபாலபிள்ளை குடும்பத்தினர்.**
**நெடுந்தீவு — 05**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகன் புலம்பல்

முந் நூறு நாட்சுமந்து முகம்மலர்ந்து பெற்ற தாயே.
எந்நேரமும் எம்மை எந்திமுலை தந்த அம்மா
அந்தி பகலாய் அரவணைத்த அச்சியரே அம்மாவே
சுந்தரவதனம் எங்கே சோறூட்டும் கையுமெங்கே.

பற்றுடன் பாசந்தந்து பண்புறு கல்விதந்து
மற்றவர் மதிக்கவென்று மாசிலா மனிதராக்கி
வற்றாத அன்புடனே வாரியே முத்த மிட்டு
கற்றாவின் மனம் போல கசிந்துருகும் உத்தமியே.

தக்கோராய் ஆக்குதற்கு சினந்தும் கடிந்தீரே
முக்குண மருந்தே மாதாவே எங்களம்மா
பக்குவமாய் புத்திபல பகர்ந்ததனை எண்ணயிலே
எக்கணமும் யாம்மறவோம் எம்தாயே போதியோ.

மகன் - கண்ணன்

## என் ஆருயிர் மகளே

தூய நல் உள்ளம்
இனித்திட மகிழ்ந்திடும்
துயர்படா வார்த்தை
மகிழ்வுடன் மறுவிலா
மகிழ்வுறு என்மகள்
இன்புற்றே இதமாய்
இருக்கின்றீர் - என
எண்ணியே நான்
வாழும் காலை
அதிர்வுடை செய்தி
என் இதயத் துடிப்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடிய நாட்களை
எண்ணியே தவிக்கிறேன்
ஆருயிர் மகளே
வாழும் நாள் எல்லாம்
வளமோடு நாம் வாழ்ந்திடவே
கரமத்தைக் கந்தன்
காலடியே தஞ்சமென
கூப்பிய உன் கரம் - என்
கண்ணெதிரே நிற்குதம்மா
எப்பிறப்பில் இனிக்காண்பேன்
உன் வதன முகம்
ஆயினும் …….. யான்
கரமத்தைக் கந்தன்
திருப்பாதம் சென்றிட்டீர் - என்றே
தேறியான் நிற்கின்றேன்
என்மகளே

தலைவர்
கரமத்தைக் கந்தன் பரிபாலன சபை
நெடுந்தீவு
என்றும் சித்தப்பா
திரு.சி.தில்லையம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் தெய்வம் அக்கா

எங்கள் தெய்வமே அக்கா
எங்கே சென்று விட்டீர்கள்
உங்கள் இழப்பால் வாடுகிறோம்
நீங்கள் மீண்டும் வரமாட்டீரோ?
உங்கள் துயரச் செய்தியை
தொலைபேசி மூலம் அறிந்து
நானோ அதிர்ந்துபோனேன்
அக்காவைப் பார்க்க ஓடிவரத் துடிதுடித்தேன்
உங்கள் உடலோ ஊசி போடாததால்
பதம் கெட்டுவிடும் என்று பதில்சொன்னார்கள்
கடைசி நேரத்திலும் உம்மைக்
கண்ணால் பார்க்கமுடியவில்லை
காலம் செய்த கோலம் என்று
கண்ணீரைச் சொரிகின்றேன்
ஆறுதல் சொல்ல என் குடும்பம் அருகிருந்தாலும்
ஆண்டவன் சோதனை என்று மனத்தை மாற்ற முடியவில்லை
அக்கா என்று
உனை அழைத்தாலும்
எனைவளர்த்த தாய் நீங்கள் அக்கா
பெற்றதாய் கட்டையேற பிள்ளைகள் அருகிருப்பார்கள்
அதுவும் எனக்குக் கிடைக்கவில்லை பெரும்பாவியாகி விட்டேன்.
தாய்மாரை இழந்து தவிக்கின்றேன்
அக்கா அக்கா என்று நான்
அழும் அழுகை கேட்கிறதா? – என்?
மனம் கலங்குவது தெரிகிறதா?
இறைபதம் எய்திய உங்களுக்கு
கண்ணீர்ப்பூக்களை காணிக்கையாக்குகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவமாய் தவமிருந்து தாயாக நின்றென்னை
சேயாக வைத்து சிறக்குக்குள் கார்த்ததிலிருந்து
அம்மாவாய் வாழ்ந்த அக்காவே எங்கு சென்றீர்?ஓயாத துயரத்தை
உள்ளத்துள் நிறைத்துவிட்டு
தூயவன் தாள் சொந்தமென்று
சொல்லாமல் சென்றீரே?
தேசங்கள் தாண்டி திசைமாறிப் போனாலும்
பாசக்கயிற்றினால் பற்றுண்டு நாமிருந்தோம்
நீங்களில்லா வாழ்வு நெஞ்சைக் குடைகிறதே!
யாரிடத்தில் நான் சொல்வேன்
யாரைத்தான் நொந்திடுவேன்.
நீர்வளர்த்த வாழ்வை நினைத்தே
நான் வாழ்ந்திடுவேன்
ஆண்டவன் எந்தன் அக்காவை எம்மோடு
மீண்டும் பிறப்பெடுத்து மிகுவாழ்வு வாழவிடு
என்றிரந்து வேண்டுகின்றேன்
இறைவனிடம் சாந்தி கொள்வோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயரும் தம்பி
சி. உதயகுமாரன்(கனடா)

**சொர்க்கத்தை தேடி நாம் எங்கும் போக வேண்டியதில்லை**

கட்டுப்பாடான வாழ்க்கை, நல்லொழுக்கம் பிறரிடம் நாம் காட்டும் தூய அன்பு, நமக்கு உதவ முடியாத ஜீவன்களிடம் காட்டும் கருணை இவற்றினால் நம்முடைய மனதிற்குக் கிடைக்கும் நிறைவே சொர்க்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் தந்தையின் தம்பியைக்
கரம் பிடித்துத் தாயான அன்னையே
உங்கள் திருமுகத்தை இனி
எங்கு நாம் காண்போமோ?
பாசமிகு தம்பி கரம்
பற்றியதால் மட்டுமன்றி
நேசமிகு சித்தியாய் எம்
நெஞ்சில் நிலைத்தவரே
கனிவான குணத்தினளாய்
கவருகின்ற மனத்தினளாய்
எம்முடனே உறவாடி
இதயம் நிறைத்தவரே
உம்முடைய உறவு பெற்றே
உள்ளம் உயர்ந்திருந்தோம்
இன்றெம்மைத் தவிக்கவிட்டு
எங்கு சென்றீர் இனியவளே?
கண்ணிமைக்கும் நொடிதனிலே
காலனுடன் சென்றுவிட்ட கண்ணகியே
உம்முடைய ஆன்மா உய்வுபெற
என்னருமை மாதாவே மைத்துனியே
இறைவனடி இறைஞ்சுகின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நீங்காத நினைவுடன்
உ. திலக்குமாரி(கனடா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழலையாய் மடி தவழ்ந்த
மண்விட்டு வந்தாலும்
மாமியார் நினைவு
மாறாத தனிசுகமே!
பேசுவதால் மட்டும்
பிரிவுகளை மறந்திருந்தோம்
பேசாமல் போனீரே?
பிரியமிக்க மாமியாரே?
யாரிடத்தில் உங்களன்பை
நான் இனியும் பெறுவேனோ?

நேசமுடன்
மருமகள்
உ.குமணா(கனடா)

## பாசப் பறவைக்கு என இதய கண்ணீர் காணிக்கைகள்

நேற்றைய பொழுதோ? இல்லை
இன்றுதான் நிகழ்ந்ததுவா?
ஊற்று நீர் கிணறாய் எங்கள்
தாகம் தீர்த்தாய் அக்கா
சாற்றிய நல்லுரைகள் சகலதும்
நிகழ்ந்த தெப்போ?
அன்னையாயிருந்து அன்பை
அள்ளியே ஊட்டி விட்டீர்
அறிவுரை பலதைச் சொல்லி
ஆளாக்கி வைத்தாய் அக்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடிக்கின்ற வயதில் எங்கள்
நுடுக்குகள் விலக்கி வைத்தாய்

ஒன்பது கிரகத்துள்ளே ஒளிமுதலாகி நின்று
இன்பத்தை எமக்களிக்க எத்தனை துன்பங்கண்டீர்
என்னிளம் பருவமெல்லாம் உன்மடி தானே தஞ்சம்
உன் மலர்ப் பாதம் காண முடியாது போசசே அக்கா

சுழலும் இவ்வுலகப்பந்தில் சுழன்றோமே சேர்ந்து நாமும்
வீழ்ந்த எம் உயிரை விட்டு வெற்றுடலோடு சுற்றி
தேடினேன் தேடுகின்றேன் தெய்வம் நீ ஆனாய் அக்கா
கோடி மலர் தூவி "தம்பி சிவா" கும்பிட்டேன் சாந்திகொள்க.

பிரிவால் துயறுரும் தம்பி
**சி. கருணா மூர்த்தி (சிவா)**
**(சுவிஸ்)**

## எண்ணத் துணிக

பேசுவதற்கு முன் செவி கொடுங்கள்
எழுதுவதற்கு முன் சிந்தியுங்கள்
குறை கூறுவதற்கு முன் பொறுத்திருங்கள்
பிரார்த்தனை செய்யுமுன் மன்னியுங்கள்
எதையும் கைவிடுமுன் முயலுங்கள்
மரணத்துக்கு முன் மற்றவர்க்கு உதவுங்கள்

- கடல் மைல் (Nautical Mail) கப்பல்கள், விமானங்கள் போன்றவற்றின் வேகங்கள் "நொட்ஸ்" (Knots) என்ற அலகில் அளவிடப்படுகிறது.
- ஒரு மணித்தியாலத்திற்கு அது எத்தனை கடல் மைல் வேகத்தில் செல்கின்றது. என்பதன் சுருக்கமே "நொட்ஸ்" ஆகும். (Knot = Nautical Mail/ Hour)
- ஒரு கடல் மைல் தூரம் என்பது 6080 அடியாகும். (இது சாதாரணமான மைல் தூரத்திலும் சற்று அதிகமாகும்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



*பாலன் தேவராய சுவாமிகள் அருளிய*

# கந்தசஷ்டிக் கவசம்

காப்பு

**நேரிசை வெண்பா**

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம் போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமல ரருள்கந்தர்
சஷ்டி கவசஞ் தனை

**குறள் வெண்பா**

அமரரிடர் தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில் வேலாலெனைக் காக்கவென்று வந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல் பூஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுகுண டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்றிரு வடிவை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி இரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியிணை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்கத் தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்படு மண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரன்று புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியுங் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துயர் அங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்கு
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடவிப் புருதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியி லணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட னிரக்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைகுற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கஎன் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன்நீகுரு பொறுப்பதுன் கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங்கு அருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை அளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியால் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட்சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

**ஸ்ரீ கந்தர் சஷ்டி கவசம் முற்றிற்று.**

மனித தர்மம்

| | |
|---|---|
| ஏழ்மையிலும் | ......நேர்மை |
| கோபத்திலும் | ......பொறுமை |
| தோல்வியிலும் | ......விடாமுயற்சி |
| தரித்திரத்திலும் | ......பரோபகாரம் |
| துன்பத்திலும் | ......தைரியம் |
| செல்வத்திலும் | ......எளிமை |
| பதவியிலும் | ......பண்பு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அபிராமிப் பட்டர் அருளியது

# அபிராமி அந்தாதி

## கள்ளவாரணப் பிள்ளையார் காப்பு

தாரமர் கொன்றையும் சண்பாக மாலையும் சாத்தும்தில்லை
ஊரர்தம் பாகத்(து) உமைமைந்த னேஉல(கு) ஏழும் பெற்ற
சீரபி ராமி அந் தாதிஎப் போதும் என் சிந்தையுள்ளே
காரமர் மேனிக் கணபதி யேநிற்கக் கட்டுரையே.

### நூல்

உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்றன் விழுத்துணையே!

துணையும் தொழுந்தெய்வ மும் பெற்ற தாயும் சுருதிகளின்
பணையும் கொழுந்தும் பணிகொண்ட வேரும் பனிமலர்ப்பூங்
கணையும் கருப்புச் சிலையுமென் பாசங் குசமுங் கையில்
அணையும் திரிபுர சுந்தரி யாவ (து) அறிந்தனமே.

அறிந்தேன் எவரும் அறியா மறையை அறிந்து கொண்டு
செறிந்தேன் உனது திருவடிக் கேதிரு வேவெருவிப்
பிறிந்தேன் நின் அன்பர் பெருமை எண்ணாத கருமநெஞ்சால்
மறிந்தே விழும்நர குக்குற வாய மனிதரையே.

மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்து சென்னி
குனிதரும் சேவடிக் கோமளமே கொன்றைவார் சடைமேல்
பனிதரும் திங்களும் பாம்பும் பகீரதி யும்படைத்த
புனிதரும் நீயும் என் புந்திஎந் நாளும் பொருந்துகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருந்திய முப்புரை செப்புரை செய்யும்புணர் முலையால்
வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி வார்சடையோன்
அருந்திய நஞ்(சு) அமு தாக்கிய அம்பிகை அம்புயமேல்
திருந்திய சுந்தரி அந்தரி பாதம் என் சென்னியதே.

சென்னிய(து) உன் பொன் திருவடித்தாமரை சிந்தையுள்ளே
மனினிய(து) உன்திரு மந்திரம் சிந்துர வண்ணப்பெண்ணே
முன்னிய நின் அடியாருடன் கூடிய முறைமுறையே
பன்னிய(து) என்றும் உன்றன்பர மாகம பத்ததியே

ததியுறு மத்திற் சூழலும் என் ஆவி தளர்விலதோர்
கதியுறு வண்ணம் கருதுகண் டாய்கம லாலயனும்
மதியுறு வேணி மகிழ்நனும்மாலும் வணங்கி என்றும்
துதியுறு சேவடி யாய் சிந்துரானன சுந்தரியே.

சுந்தரி எந்தை துணைவி என் பாசத் தொடரையெல்லாம்
வந்தரி சிந்துர வண்ணத்தி னாள்மகி டன்தலைமேல்
அந்தரி நீலி அழியா கன்னிகை ஆரணத்தோன்
சுந்தரி கைத்தலத் தாள் என் கருத்தனவே.

கருத்தன எந்தைதன் கண்ணன் வண்ணக் கனகவெற்பிற்
பெருத்தன பால் அழும் பிள்ளைக்கு நல்கின் பேரருள் கூர்
திருத்தன பாரமும் ஆரமும் செங்கைச் சிலையும் அம்பும்
முருத்தன மூரலும் நீயும் அம் மேவந்தென் முன் நிற்கவே

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்ப(து) உன்னை
என்றும் வணங்குவ(து) உன்மலர்த் தாள் எழு தாமறையின்
ஒன்றும் அரும் பொரு ளேஉமையே இமயத்(து)
அன்றும் பிறந்தவ ளே அழி யாமுத்தி ஆனந்தமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்த மாய்என் அறிவாய் நிறைந்த அமுதமுமாய்
வானந்த மான வடி(வு) உடை யாள்மறை நான்கினுக்கும்
தானந்த மான சரணாரவிந்தம் தவளநிறக்
கானந்தம் ஆடரங் காம்எம் பிரான்முடிக் கண்ணியதே.

கண்ணிய(து) உன்புகழ் கற்ப(து) உன் நாமம் கசிந்துபத்தி
பண்ணிய(து) உன்இரு பதாம் புயத்தில் பகல் இரவா
நண்ணியது உன்னை நயற்றோர் அவையத்து நான்முன்செய்த
புண்ணியம் ஏ(து)என் அம்மேபுவி ஏழையும் பூத்தவளே.

பூத்தவ ளேபுவ னம்பதி னான்கையும் பூத்தவண்ணம்
காத்தவ ளேபின் கரந்தவ ளேகறைக் கண்டனுக்கு
மூத்தவ ளேஎன்றும் மூவா முகுந்தற்(கு) இளையவளே
மாத்தவ ளேஉன்னை அன்றிமற் றொர்தேய்வம் வந்திப்பதே.

வந்திப் பவர்உன்னை வானவர் தானவர் ஆனவர்கள்
சிந்திப் பவர்நல் திசைமுகர் நாரணர் சிந்தையுள்ளே
பந்திப் பவர்அழி யாப்பர மானந்தர் பாரில் உன்னைச்
சந்திப் பவர்க்(கு) எளிதாம் எமபிராட்டி நின் தண்ணளியே.

தண்ணளிக் கென்றுமுன் னேபல கோடி தவங்கள் செய்வார்
மண்ணளிக் கும்செல்வ மோபெறு வார்மதி வானவர்தம்
விண்ணளிக் கும்செல் வமும்அழி யாமுத்தி வீடுமன்றோ
பண்ணளிக் கும்செல் பரிமள யாமளைப் பைங்கிளியே.

கிளியே கிளைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்தொளிரும்
ஒளியே ஒளிரும் ஒளிக்கிட மேஎண்ணில் ஒன்றுமில்லா
வெளியே வெளிமுதல் பூதங்க ளாகி விரிந்த அம்மே
அளியேன் அறிவள விற்(கு) அளவான(து) அதிசயமே.

அதிசய மான வடி(வு) உடையாள் அர விந்தமெல்லாம்
துதிசய ஆனை சுந்தர வல்லி துணை இரதி
பதிசய மான(து) அபசய மாகமுன் பார்த்தவர்தம்
மதிசய மாகவன் றோவாம பாகத்தை வவ்வியதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவ்விய பாகத்(து) இறைவரும் நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியும் உங்கள் திருமணக் கோலமும் சிந்தையுள்ளே
அவ்வியம் தீர்க்தென்னை ஆண்டபொற் பாதமும் ஆகிவந்து
வெவ்விய காலன்என் மேல்வரும் போது வெளிநிற்கவே.

வெளிநின்ற நின்திரு மேனியைப்பார்த்தென் விழியும் நெஞ்சும்
களிநின்ற வெள்ளம் கரைகண்ட தில்லை கருத்தினுள்ளே
தெளிநின்ற ஞானம் திகழ்கின்ற தென்ன திருவுளமோ
ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும் மேவி உறைபவளே.

உறைகின்ற நின்திருக் கோயில்நின் கேள்வர் ஒருபக்கமோ
அறைகின்ற நான்மறை யின்அடி யோமுடி யோஅமுதம்
நிறைகின்ற வெண்திங்களோகஞ்ச மோஎன்றன் நெஞ்சகமோ
மறைகின்ற வாரிதி யோபூர ணாசல மங்கலையே.

மங்கலை செங்கல சம்முலை யாள்மலை யாள்வருணச்
சங்கலை செங்கைச் சகல கலாமயில் தாவுகங்கை
பொங்கலை தங்கும் புரிசடை யோன்புடை யாள் உடையாள்
பிங்கலை நீலிசெய் யாள்வெளி யாள்பசும் பெண்கொடியே.

கொடியே இளவஞ்சிக் கொம்பே எனக்குவம் பேபழுத்த
பிடியே மறையின் பரிமள மேபனி மால் இமயப்
பிடியே பிரமன் முதலாய தேவரைப் பெற்ற அம்மே
அடியேன் இறந்திங்(கு) இனிப்பிற வாமல்வந்(து) ஆண்டுகொள்ளே.

கொள்ளேன. மனத்தில்நின் கோலம் அல்லா(து) அன்பர் கூட்டந்
விள்ளேன் பரசம யம்விரும் பேன்வியன் மூவுலகுக்(கு) தன்னை
உள்ளே அனைத்தினுக் கும்புறம் பேஉள்ளத் தேவிளைந்த
கள்ளே களிக்கும் களியே அளியஎன் கண்மணியே.

மணியே மணியின் ஒளியே ஒளிரும் மணிபுனைந்த
அணியே அணியும் அணிக்கழ கேஅணுகாதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே அமரர் பெருவிருந்தே
பணியேன் ஒருவரை நின்பத்ம பாதம் பணிந்தபின்னே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னே திரிந்துஉன் அடியாரைப் பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கள் முயன்றுகொண்டேன் முதல் மூவருக்கும்
அன்பே உலகுக்(கு) அபிராமி என்னும் அருமருந்தே
என்னே இனி உன்னை யான்மற வாமல்நின்று ஏத்துவனே.

ஏத்தும் அடியவர் ஈரே முலகினை யும்படைத்தும்
காத்தும் அளித்தும் திரிபவ ராம்கமழ் பூங்கடம்பு
சாத்தும் குழல் அணங்கேமணம் நாறும் நின்தாள் இணைக்(கு) என்
நாத்தங்கு புன்மொழி ஏறியவாறு நகையுடைத்தே.

உடைத்தனை வஞ்சப் பிறவியை உள்ளம் உருகும் அன்பு
படைத்தனை பத்ம பதயுகம் சூடும் பணி எனக்கே
அடைத்தனை நெஞ்சத்(து) அழுக்கைஎல் லாம்நின் அருட்புனலால்
துடைத்தனை சுந்தரி நின்னருள் ஏதென்று சொல்லுவதே

சொல்லும் பொருளும் எனநட மாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடி யேநின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழும் அவர்க் கேஅழி யாஅரசும்
செல்லும் தவநெறி யும்சிவ லோகமும் சித்திக்குமே.

சித்தியும் சித்தி தருந்தெய்வ மாகித் திகழும்பரா
சக்தியும் சக்தி தழைக்கும் சிவமும் தவம்முயல்வார்
முத்தியும் முத்திக்கும் வித்தும்வித் தாகி முளைத்தெழுந்த
புத்திய்ும புத்தியின் உள்ளே புரக்கும் புரத்தையன்றே.

அன்றே தடுத்தென்னை ஆண்டுகொண் டாய்கொண்ட(து)
அல்லவென்கை
நன்றே உனக்(கு) இனிநான் என்செயினும் நடுக்கடலுள்
சென்றே விழினும் கரையேற் றுகைநின் திருவுளமே
ஒன்றே பலவுரு வேயரு வேஎன் உமையவளே.

உமையும் உமையொரு பாகனும் ஏக உருவில்வந்திங்(கு)
எமையும் தமக்கன்ப செய்யவைத் தார்இனி எண்ணுதற்குச்
சமயங் களுமில்லை ஈன்றெடுப் பாள்ஒரு தாயும் இல்லை
அமையும் அமையுறு தோளியர் மேல்வைத்த ஆசையுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசைக்கடலில் அகப்பட்(டு) அருளற்ற அந்தகன்கைப்
பாசத்தில் அல்லல்பட இருந் தேனைநின் பாதம் என்னும்
வாசக் கமலம் தலைமேல் வலியவைத்(து) ஆண்டுகொண்ட
நேசத்தை என்சொல்லு வேன்ஈசர் பாகத்து நேரிழையே.

இழைக்கும் வினைவழி யேஅடும் காலன் எனைநடுங்க
அழைக்கும் பொழுதுவந்(து) அஞ்சல் என்பாய் அத்தர் சித்தம்
குழைக்கும் களபக் குவிமுலை யாமளைக் கோமளமே எல்லாம்
உழைக்கும் பொழு(து) உன்னை யேஅன்னை யேஎன்பன் ஓடிவந்தே

வந்தே சரணம் புகும் அடி யாருக்கு வான்உலகம்
தந்தே பரிவொடு தான்போய் இருக்கும் சதுர்முகமும்
பைந்தேன் அலங்கல் பருமணி ஆகமும் பாகமும் பொன்
செந்தேன் மலரும் அலர்கதிர் ஞாயிறும் திங்களுமே.

திங்கட் பசுவின் மணம் நாறும் சீறடி சென்னிவைக்க
எங்கட்(கு) ஒருதவம் எய்திய வாஎண் ணிறந்த விண்ணோர்
தங்கட்கும் இந்தத் தவமெய்து மோதரங்கக் கடலுள்
வெங்கட் பணியனை மேல்துயில் கூரும் விழும்பொருளே.

பொருளே பொருள்முடிக் கும்போக மேஅரும் போகம்செய்யும்
மருளே மருளில் வருந்தெரு ளேஎன் மனத்துவஞ்சத்(து)
இருளேதும் இன்றி ஒளிவெளி யாகிஇருக்கும் உன்றன்
அருளே(து) அறிகின்றிலேன் அம்புயா தனத்(து) அம்பிகையே.

கைக்கே அணிவது கன்னலும் பூவும் கமலம் அன்ன
மெய்க்கே அணிவது வெண்முத்து மாலை விடஅரவின்
பைக்கே அணிவது பன்மணிக் கோவையும் பட்டும் எட்டுத்
திக்கே அணியும் திருவுடை யான்இடம் சேர்பவளே.

பவளக்கொடியில் பழுத்தசெவ் வாயும் பனிமுறுவல்
தவளத் திருநகை யும்துணை யாஎங்கள் சங்கரனைத்
துவளப் பொருது துடியிடை சாய்க்கும் துணைமுலையாள்
அவளைப் பணிமின்கண் டீர்அம ராவதி ஆளுகைக்கே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளுகைக்(கு) உன்றன் அடித்தாமரைகள் உண்டு அந்தகன்பால்
மீளுகைக்கு உன்றன் விழியின் கடையுண்டு மேல்இவற்றின்
மூளுகைக்(கு) என்குறை நின்குறை யேஅன்று முப்புரங்கள்
மாளுகைக்(கு) அம்பு தொடுத்தவில் லான் பங்கில் வாள்நுதலே.

வாணுதல் கண்ணியை விண்ணவர் யாவரும் வந்திறைஞ்சிப்
பேணுதற்(கு) எண்ணிய எம்பெரு மாட்டியைப்பேதைநெஞ்சில்
காணுதற்(கு) அண்ணியள் அல்லாத கன்னியைக் காணும்அன்பு
பூணுதற்(கு) எண்ணியஎண்ணம் அன்றோ? முன்செய் புண்ணியமே.

புண்ணியம் செய்தன மேமன மேபுதுப் பூங்குவளைக்
கண்ணியம் செய்யக் கணவரும் கூடிநம் காரணத்தால்
நண்ணிஇங் கேவந்த தம்மடி யார்கள் நடுவிருக்கப்
பண்ணிநம் சென்னியின் மேற்பத்ம பாதம் பதித்திடவே.

இடங்கொண்டு விம்மி இணைகொண்டு இறுதி இளகிமுத்து
வடங்கொண்ட கொங்கை மலைகொண்டு இறவைர் வலியநெஞ்சை
நடங்கொண்ட கொள்கை நலங்கொண்ட நாயகி நல்லரவின்
படங்கொண்ட அல்குல் பனிமொழி வேதப்பரிபுரையே.

பரிபுரச் சீறடி பாசாங் குசைபஞ்ச பாணிஇன்சொல்
திரிபுர சுந்தரி சிந்துர மேனியள் தீமைநெஞ்சில்
புரிபுர வஞ்சரை அஞ்சக் குனிபொருப் புச்சிலைக்கை
எரிபுரை மேனி இறவைர்செம் பாகத்(து) இருந்தவளே.

தவளே இவள்எங்கள் சங்கர னார்மனை மங்கலமாம்
அவளே அவர்தமக்கு அன்னையும் ஆயினள் ஆகையினால்
இவளே கடவுளர் யாவர்க்கும் மேலை இறை வியும்ஆம்
துவளேன் இனியொரு தெய்வமுன் டாகமெய்த் தொண்டு செய்தே.

தொண்டுசெய் யாதுநின் பாதம் தொழாது துணிந்திச்சையே
பண்டுசெய் தார்உள ரோஇல ரோஅப்பரிசடியேன்
கண்டுசெய் தால்அது கைதவ மோஅன்றிச் செய்தவமோ
மிண்டுசெய்தாலும் பொறுக்கைநன் றேபின் வெறுக்கையன்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறுக்கும் தகைமைகள் செய்யினும் தம்மடி யாரைமிக்கோர்
பொறுக்கும் தகைமை புதியதன் றேபுது நஞ்சையுண்டு
கறுக்கும் திருமிடற் றான் இடப்பாகம் கலந்தபொன்னே
மறுக்கும் தகைமைகள் செய்யினும் யான்உன்னை வாழ்த்துவனே.

வாழும் படியொன்று கண்டுகொண் டேன்மனத் தெயொருவர்
வீழும் படியன்று விள்ளும் படியன்று வேலைநிலம்
ஏழும் பருவரை எட்டும்எட்டாமல் இரவுபகல்
சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே.

சுடரும் கலைமதி துன்றும் சடைமுடிக் குன்றில் ஒன்றிப்
படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதித்து நெஞ்சில்
இடரும் தவிர்த்திமைப் போதிருப் பார்பின்னும் எய்துவரோ?
குடரும் கொழுவும் குருதியும் தோயும் குரம்பையிலே.

குரம்பை அடுத்துக் குடிபுக்க ஆவிவெங் கூற்றுக்கிட்ட
வரம்பை அடுத்து மறுகும் அப்போது வளைக்கை அமைத்(து)
அரம்பை அடுத்து அரிவையர் சூழவந்(து) அஞ்சல் என்பாய்)
நரம்பை அடுத்து இசைவடி வாய்நின்ற நாயகியே.

நாயக நான்முகி நாரா யணிகை நளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கிஎன்
றாயகி யாதி உடையாள் சரணம் அரண்நமக்கே.

அரணம் பொருள் என்று அருள் ஒன் றிலாத அசுர்தங்கள்
முரண்அன்(று) அழிய முனிந்தபெம் மானும் முகுந்தனுமே
சரணம் சரணம் எனநின்ற நாயகி தன்னடியார்
மரணம் பிறவி இரண்டும்எய் தார்இந்த வையகத்தே.

வையம் துரகம் மதகரி யாமகு டம்சிவிகை
பெய்யும் கனகம் பெருவிலை ஆரம் பிறைமுடித்த
ஐயன் திருமனை யாள் அடித் தாமரைக்(கு) அன்புமுன்பு
செய்யும் தவம் உடையார்க்குள வாகிய சின்னங்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறிய மருங்கினில் சாத்திய செய்ய பட்டும்
பென்னம் பெரிய முலையும்முத் தாரமும் பிச்சிமொய்த்த
கன்னங் கரிய குழலும்கண் மூன்றும் கருத்தில்வைத்துத்
தன்னந் தனியிருப் பார்க்கிது போலும் தவமில்லையே.

இல்லாமை சொல்லி ஒருவர்தம் பால்சென்(று) இழிவுபட்டு
நில்லாமை நெஞ்சில் நினைகுவிரேல் நித்தம் நீடுதவம்
கல்லாமை கற்ற கயவர்தம் பால்ஒரு காலத்திலும்
சொல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே.

மின்னா யிரம்ஒரு மெய்வடி வாகி விளங்குகின்ற
தன்னாள் அகமகிழ் ஆனந்த வல்லி அருமறைக்கு
முன்னாய் நடுவெங்கு மாய்முடி வாய முதல்விதன்னை
உன்னா(து) ஒழியினும் உன்னினும் வேண்டுவது ஒன்றிலையே.

ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்(து) இவ் வுலகெங்குமாய்
நின்றாள் அனைத்தையும் நீங்கிநிற்பாள் என்றன் நெஞ்சினுள்ளே
பொன்றாது நின்று புரிகின்ற வாஇப் பொருள் அறிவார்
அன்றா லிலையில் துயின்றபெம் மானும்என் ஐயனுமே.

ஐயன் அளந்த படியிரு நாழிகொண்(டு) அண்டம் எல்லாம்
உய்ய அறம்செயும் உன்னையும் போற்றி ஒருவர்தம்பால்
செய்ய பசுந்தமிழ்ப் பாமாலை யுங்கொண்டு சென்று பொய்யும்
மெய்யும் இயம்பவைத் தாய்இது வோஉன்றன் மெய்யருளே.

அருணாம் புயத்தும் என் சித்தாம் புயத்தும் அமர்ந்திருக்கும்
தருணாம் புயமுலைத் தையல்நல் லாள்தகை சேர்நயனக்
கருணாம் புயமும் வதனாம் புயமும் கராம்புயமும்
சரணாம் புயமும் அல் லாற்கண்டி லேன்ஒரு தஞ்சமுமே.

தஞ்சம் பிறிதில்லை ஈதல் தென்னுன் தவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைக்கின்றி லேன்ஒற்றை நீள்சிலையும்
அஞ்சம்பும் இக்(கு) அவ் ஆகநின் றாய்அறி யார்எனினும்
பஞ்சஞ்சும் மெல்லடி யார்அடி யார்பெற்ற பாலரையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலினும் சொல்இனி யாப்பனி மாமலர்ப் பாதம்வைக்க
மாலினும் தேவர் வணங்கநின் றோன்கொன்னை வார்சடையின்
மேலினும் கீழ்நின்று வேதங்கள் பாடும் மெய்ப் பீடம்ஒரு
நாலினும் சாலநன் றோஅடி யோன்முடை நாய்த்தலையே.

நாயேனை யும் இங்(கு) ஒருபொரு ளாகநயந்துவந்து
நீயே நினைவின்றி ஆண்டுகொண் டாய்நின்னை உள்ளவண்ணம்
பேயேன் அறியும் அறிவுதந் தாய்என்ன பேறுபெற்றேன்
தாயே மலைமக ளேசெங்கண் மால்திருத் தங்கைச்சியே.

தங்கச் சிலைகொண்டு தானவர் முப்புரம் சாய்த்துமத
வெங்கண் கரியுரி போர்த்தசெஞ் சேவகன் மெய்யடையக்
கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி கோகனகச்
செங்கைக் கரும்பும் அலரும்எப் போதும்என் சிந்தையதே.

தேறும் படிசில ஏதுவும் காட்டிமுன் செல்கதிக்குக்
கூறும் பொருள்குன்றில் கொட்டும் தறிகுறிக் கும்சமயம்
ஆறும் தலைவி இவளாய் இருப்ப(து) அறிந்திருந்தும்
வேறும் சமயம்உண் டென்றுகொண்டாடிய வீணருக்கே.

வீணே பலிகவர் தெய்வங்கள் பாற்சென்று மிக்க அன்பு
பூணேன் உனக்(கு) அன்பு பூண்டுகொண்டேநின் புகழ்ச்சியன்றிப்
பேணேன் ஒருபொழு தும்திரு மேனிப்ர காசமன்றிக்
காணேன் இருநில மும்திசை நான்கும் ககனமுமே.

ககனமும் வானும் புவனமும் காணவிற் காமன் அங்கம்
தகனமுன் செய்த தவப்பெரு மாற்குத் தடக்கையும் செம்
முகனமுந் நான்கிரு மூன்றெனத் தோன்றிய மூதறிவின்
மகனுமுண் டாயதன் றோவல்லி நீசெய்த வல்லபமே.

வல்லபம் ஒன்றறி யேன்சிறி யேன்நின் மலரடிசெம்
பல்லவம் அல்லது பற்றொன்றி லேன்பசும் பொற்பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப் பாய்வினை யேன்தொடுத்த
சொல்லவ மாயினும் நின்திரு நாமங்கள் தோத்திரமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோத்திரம் செய்து தொழுமின் போலும்நின் தோற்றம் ஒரு
மாத்திரைப் போதும் மனத்தில்வை யாதவர் வண்மைகுலம்
தோத்திரம் கல்வி குணம்குன்றி நாளும் குடில்கள் தொறும்
பாத்திரம் கொண்டு பலிக்குழ லாநிற்பர் பாரெங்குமே.

பாரும் புனலும் கனலும்வெங் காலும் படர்விசும்பும்
ஊரும் முருகு சுவையொளி யூறொளி ஒன்றுபடச்
சேரும் தலைவி சிவகாம சுந்தரி சீரடிக்கே
சாரும் தவமுடைய யார்படை யாத தனமில்லையே.

தனந்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந்தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாள்அபி ராமி கடைக்கண்களே.

கண்களிக் கும்படி கண்டுகொண்டேன்கடம் பாடவியில்
பண்பளிக் கும்குரல் வீணையும் கையும் பயோதரமும்
மண்களிக் கும்பச்சை வண்ணமுமாகி மதங்கர் குலப்
பெண்களிற் றோன்றிய எம்பெரு மாட்டிதன் பேரழகே.

அழகுக்(கு) ஒருவரும் ஒவ்வாத வல்லி அருமறைகள்
பழகிச் சிவந்த பதாம்புயத் தாள்பனி மாமதியின்
குழவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்பிருக்க
இழிவுற்று நின்றநெஞ்சேயிரங் கேலுனங்(கு) என்குறையே.

என்குறை தீரநின்(று) ஏத்துகின் றேன்இனி யான்பிறக்கின்
நின்குறை யேஅன்றி யார்குறை காண்இரு நீள்விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்
தன்குறை தீரஎங் கோன்சடை மேல்வைத்த தாமரையே.

தாமம் கடம்பு படைபஞ்ச பாணம் தனுக்கரும்பு
யாமம் வைரவர் ஏத்தும் பொழு(து) எமக்கென்றுவைத்த
சேமம் திருவடி செங்கைகள் நான்(கு) ஒளி செம்மையம்மை
நாமம் திரிபுரை ஒன்றோ டிரண்டு நயனங்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நயனங்கள் மூன்றுடை நாதனும் வேதமும் நாரணனும்
அயனும் பரவும் அபிராம வல்லியை அடியிணையைப்
பயன்என்று கொண்டவர் பாவையர் ஆடவும் பாடவும்பொன்
சயனம் பொருந்து தமனியக் காவினில் தங்குவரே.

தங்குவர் கற்பகத் தருவின் நீழலில் தாயரின்றி
மங்குவர் மண்ணில் வழுவாப் பிறவியை மால்வரையும்
பொங்குவர் ஆழியும் ஈரேழ் புவனமும் பூத்தஉந்திக்
கொங்கிவர் பூங்குழ லாள்திரு மேனி குறித்தவரே.

குறித்தேன் மனத்தில்நின் கோலம்எல் லாம்நின் குறிப்பறிந்து
மறித்தேன் மறலி வருகின்ற நேர்வழி வண்டுகிண்டி
வெறித்தேன் அவிழ்கொன்றை வேணிப்பிரான் ஒருகூற்றைமெய்யில்
பறித்தே குடிபுகு தும்பஞ்ச பாண பைரவியே.

பைரவி பஞ்சமி பாசாங் குசபஞ்ச பாணிவஞ்சர்
உயிரவி உண்ணும் உயர்சண்டி காளி ஒளிரும்கலா
வயிரவி மண்டலி மாலினி சூலி வராகியென்றே
செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே.

செப்பும் கனக கலசமும் போலும் திருமுலைமேல்
அப்பும் களப அபிராம வல்லி அணிதரளக்
கொப்பும் வயிரக் குழையும் விழியின் கொழுங்கடையும்
துப்பும் நிலவும் எழுதிவைத் தேன்என் துணைவிழிக்கே.

விழிக்கே அருளுண்(டு) அபிராம வல்லிக்கு வேதம்சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்(டு) எமக்(கு) அவ் வழிகிடக்கப்
பழிக்கே சுழன்றுவெம் பாவங்களேசெய்து பாம்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர்தம் மோடென்ன கூட்டினியே.

கூட்டிய வாஎன்னைத் தன்னடி யாரில் கொடியவினை
ஒட்டிய வாஎன்கண் ஓடிய வாதன்னை உள்ளவண்ணம்
காட்டிய வாகண்ட கண்ணும் மனமும் களிக்கின்றவா
ஆட்டிய வாநடம் ஆடகத் தாமரை ஆரணங்கே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணங்கே அணங்குகள் நின்பரி வாரங்கள் ஆகையினால்
வணங்கேன் ஒருவரை வாழ்த்து லேன்நெஞ்சில் வஞ்சகரொ(டு)
இணங்கேன் என(து) என்றிருப் பார்சிலர் யாவரொடும்
பிணங்கேன் அறிவொன்றி லேன்என்கண்நீவைத்த பேரளியே.

அளியார் கமலத்தில் ஆரணங் கேஅகி லாண்டமும் நின்
ஒளியாக நின்ற ஒளிர்திரு மேனியை உள்ளுதொறும்
களியாகி அந்தக் கரணங்கள் விம்மிக் கரைபுரண்டு
வெளியாய் விடின் எங்ங னேமறப் பேன்நின் விரகினையே.

விரவும் புதுமலர் இட்டுநின் பாத விரைக்கமலம்
இரவும் பகலும் இறைஞ்சவல் லார்இமை யோர்எவரும்
பரவும் பதமும் அயிரா வதமும் பகீரதியும்
உரவும் குலிசமும் கற்பகக் காவும் உடையவளே.

உடையாளை ஒல்கு செம்பட்டு உடையாளை ஒளிர்மதிசெஞ்
சடையாளை வஞ்சகர்நெஞ் சடையாளைத் தயங்கு நுண்ணூல்
இடையாளை எங்கள்பெம் மானிடை யாளைஇங்(கு) என்னைஇனிப்
படையாளை உங்களை யும்படை யாவண்ணம் பார்த்திருமே.

பார்க்கும் திசைதொறும் பாசாங் குசமும் பனிச்சிறைவண்(டு)
ஆர்க்கும் புதுமலர் ஐந்தும் கரும்பும்என் அல்லல்எல்லாம்
தீர்க்கும் திரிபுரை யாள்திரு மேனியும் சிற்றிடையும்
வார்க்குங் குமமுலை யும்முலை மேல்முத்து மாலையுமே.

மாலயன் தேட மறைதேட வானவர் தேடநின்ற
காலையும் குடகக் கையையும் கொண்டு கதித்தகப்பு
வேலைவெங் காலன்என் மேல்விடும்போது வெளிநில் கண்டாய்
பாலையும் தேனையும் பாகையும் போலும் பணிமொழியே.

மொழிக்கும் நினைவுக்கும் எட்டாத நின்திரு மூர்த்தி என்றன்
விழிக்கும் வினைக்கும் வெளிநின்ற தாழ்விழி யால்மதனை
அழிக்கும் தலைவர் அழியா விரதத்தை அண்டமெல்லாம்
பழிக்கும் படியொரு பாகங்கொண் டாலும் பராபரையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரமென்று உனையடைந் தேன்தமி யேனும்உன் பக்தருக்குள்
தரமன்று இவன்என்று தள்ளத் தகாது தரியலர்தம்
பரம்அன்று எரியப் பொருப்புவில் வாங்கிய போதில்அயன்
சிரமம் ஒன்று செற்றகை யாள்இடப் பாகம் சிறந்தவளே.

சிறக்கும் கமலத் திருவேநின் சேவடி சென்றிவைக்கத்
துறக்கம் தரும்நின் துணைவரும் நீயும் துரியம்அற்ற
உறக்கம் தரவந்(து) உடம்போடு உயிர்உற வற்றறிவு
மறக்கும் பொழுதென்முன்னேவரல் வேண்டும் வருந்தியுமே.

வருந்தா வகைஎன் மனத்தா மரையினில் வந்துபுகுந்(து)
இருந்தாள் பழைய இருப்பிடமாக இனிஎனக்குப்
பொருந்தா தொருபொருள் இல்லைவிண் மேவும் புலவருக்கு
விருந்தாக வேலை மருந்தா னதைநல்கும் மெல்லியளே.

மெல்லிய நுண்ணிடை மின்அனை யாளை விரிசடையோன்
புல்லிய மென்முலை பொன்அனை யாளைப் புகழ்ச்துமணி
சொல்லிய வண்ணம் தொழும்அடி யாரைத் தொழுமவர்க்குப்
பல்லியம் ஆர்த்தெழ வெண்பக(டு) ஊரும் பதம்தருமே.

பதத்தே உருகிநின் பாதத்தி லேமனம் பற்றிஉன்றன்
இதத்தே ஒழுக அடிமைகொண் டாய்இனி யான்ஒருவர்
மதத்தே மதிமயங் கேன்அவர் போனவழியும் செல்லேன்
முதற்றேவர் மூவரும் யாவரும் போற்றும் முகிழ்நகையே.

நகையே இகிதிந்த ஞாலமெல் லாம்பெற்ற நாயகிக்கு
முகையே முகில்முலை மானே முதுகண் முடிவில்அந்த
வகையே பிறவியும் வம்பே மலைமகள் என்பதுநாம்
மிகையே இவள்தன் தகைமையை நாடி விரும்புவதே.

விரும்பித் தொழும்அடி யார்விழி நீர்மல்கி மெய்புளகம்
அரும்பித் ததும்பிய ஆனந்தமாகி அறிவிழந்து
சுரும்பிற் களித்து மொழிதடு மாறிமுன் சொன்னஎல்லாம்
தரும்பித்தர் ஆவரென்றால் அபி ராமி சமயம்நன்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றே வருகினும் தீதே விளைகினும் நான் அறிவ(து)
ஒன்றேயு மில்லை உனக்கே பரம்எனக்(கு) உள்ளஎல்லாம்
அன்றே உனதென்(று) அழித்துவிட்டேன்அழி யாதகுணக்
குன்றே அருட்கட லேஇம வான்பெற்ற கோமளமே.

கோமள வல்லியை அல்லியந் தாமரைக்கோயில்வைகும்
யாமள வல்லியை ஏதம் இலாளை எழுதரிய
சாமள மேனிச் சகலக லாமயில் தன்கைத்தம்பால்
ஆமள வும்தொழு வார்எழு பாருக்கும் ஆதிபரே.

ஆதித்தன் அம்புலி அங்கி குபேரன் அமரர்தங்கோன்
போதிற் பிரமன் புராரி முராரி பொதியமுனி
காதிப் பொருபடைக் கந்தன் கணபதி காமன்முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலையே.

தைவந்து நின்னடித் தாமரை சூடிய சங்கரற்குக்
கைவந்த தீயும் தலைவந்த ஆறும் கரந்ததெங்கே
மெய்வந்த நெஞ்சின் அல் லால்ஒரு காலும் விரகர்தங்கள்
பொய்வந்த நெஞ்சில் புகஅறி யாமடப் பூங்குயிலே.

குயிலாய் இருக்கும் கடம்பா டவியிடைக் கோலஇயல்
மயிலாய் இருக்கும் இமயா சலத்திடை வந்துதித்த
வெயிலாய் இருக்கும் விசும்பில் கமலத்தின் மீதன்னமாம்
கயிலா யருக்(கு) அன்று இமவான் அளித்த கனங்குழையே.

குழையைத் தழுவிய கொன்றையந் தார்கமழ் கொங்கைவல்லி
கழையைப் பொருத திருநெடுந் தோளும் கரும்புவில்லும்
விழையப் பொருதிறல் வேரியம் பாணமும் வெண்ணகையும்
உழையைப் பொருகண்ணும் நெஞ்சில்எப் போதும் உதிக்கின்றவே.

**நூற் பயன்**

ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்டம் எல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத் தாளைப் புவிஅடங்கக்
காத்தாளை ஐங்கணை பாசாங்குசமும் கரும்பும் அங்கை
சேர்த்தாளை முக்கண்ணி யைத்தொழு வார்க்(கு) ஒருதீங்கில்லையே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன்
# திருவூஞ்சல்



சீர்பூத்த தென்னிலங்கை தன்னின் மேவும்
திரைபூத்த கடனயினை நகரில் வாழும்
ஏர்பூத்த நாகேசு வரியைப் போற்றி
இசைபூத்த செந்தமிழா லூஞ்சல் பாட
ஆர்பூத்த சடைமௌலி யரனா ரீன்ற
அருள்பூத்த வறிவிச்சை தொழிலென் றோதும்
கார்பூத்த மும்மைமத களிற்றின் பாதம்
கார்பூத்த மலர்கொண்டே கருதி வாழ்வோம்.

பலனோங்கு செம்பவளங் கால்க ளாக
பகர்வைர ரத்தினமே விட்ட மாக
குலனோங்கு வெண்டரளங் கயிற தாக
கூறரிய மாணிக்கம் பலகை யாக
வலனோங்கு மூஞ்சன்மிசை யினிது வைகி
மலர்மகளுங் கலைமகளும் வடந்தொட்டாட்ட
நலனோங்கு திருநயினை நகரில் வாழும்
நாகபர மேஸ்வரியே யாடிரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உவகையொடு மலரயன் மால் கரங்கள் கூப்ப
ஓசைமணி வாயிலட்ட பாலர் காப்ப
தவமறையோர் தூபமொடு தீபங்காட்ட
தாழந்துக நாதர்புகழ் மாலை சூட்ட
அவிரிடப துவசமகல் வானற் தூர்ப்ப
அனந்தன்முத லுரகர்செய செயவென் றார்ப்ப
நவையறுசீர் நயினைநகர் தன்னி வாழ்
நாகபர மேஸ்வரியே யாடீரூஞ்சல்

கொம்பினொடு துடிமுரசு முழவ மோங்க
குடைகளுட னாலவட்டம் குழுமி யோங்க
தும்புருநா ரதர்வேத கீதம் பாட
தொண்டராக மகிழ்ந்துசுக வாழ்வு கூட
வம்பவிழு மலர்மாரி யமரர் பெய்ய
வரமுனிவ ரடிபரவி யாசி செய்ய
நம்புமடி யவர்க்கருளி நயினை வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீரூஞ்சல்

அன்னநடை யயிராணி கவிதை தாங்க
அயிலைநிகர் விழியரம்பை களாசி யேந்த
வன்னமுலை யுருவசிவெண் கவரி வீச
மணிகொள்கிரு தாசிகமண் டலங்கைக் கொள்ள
மின்னிடைமே னகைவெளிலை பாகுநல்க
வியந்துதிலோத் தமைவிகித பாகுநல்க
வியந்துதிலோத் தமைவிகித நடனஞ் செய்ய
நன்னயஞ்சேர் நயினைநகர் தன்னில் வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீரூஞ்சல்.

மதிமுகமா லினிபனிநீர் வாசந் தூவ
மயிலைநிகர் ககேசைமல ரடிக ணீவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதிமுறைமங் கலைமுதலோ ராலஞ் சுற்ற
வேதியர்தம் மகளிர்சுப வசனஞ் சாற்ற
திவினைய மொடுசுமனை யாடி காட்ட
அன்பினநிந் திதைசுகந்த வருக்க நீட்ட
நதியுலவு நயினைநகர் தன்னில் வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீரூஞ்சல்.

கோலமுறு வைரமணிச் சுட்டி யாட
குலவுமெழின் மாணிக்கத் தோடு மாட
வாலியமுத் தாரமொடு மதணி யாட
வயங்குவனை தொடியுடனஞ் கதமு மாட
சாலவொளிர் பாடகமுஞ் சிலம்பு மாட
தண்டையொடு பாதசரந் தயங்கி யாட
ஞாலமுக மென்விளங்கு நயினை வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீரூஞ்சல்.

முந்துதவ மாதர்துதி கூறி யாட
முகமனொடு புனன்மாதர் முன்னின் றாட
வந்தனையோ டுரகமட ராட
வரையிலுறை மாதரடி வணங்கி யாட
கந்தருவ மாதரிசை பாடி யாட
கருதரிய புவிமாதர் களிகொண் டாட
நந்துவழ் கழனிசெறி நயினை வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீரூஞ்சல்.

ஆரணியே யம்பிகையே யாடீரூஞ்சல்
அந்தரியே சௌந்தரியே யாடீரூஞ்சல்
பூரணியே புங்கவியே யாடீரூஞ்சல்
புராதனியே புராச்தகியே யாடீரூஞ்சல்
காரணியே காருணியே யாடீரூஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னிகையே கண்மணியே யாடீரூஞ்சல்
நாரணியே நாயகியே யாடீரூஞ்சல்
நாகபர மேஸ்வரியே யாடீரூஞ்சல்

பனிவரையில் வருமுறையே பரையே போற்றி
பகருமறை மெண்ணான்கும் வளர்த்தாய் போற்றி
தனிமுதலாம் பரமனிடத் தவளே போற்றி
தணப்பில்பவ சக்திவடி வானாய் போற்றி
இனிமைமிகு மாரமுதே கனியே போற்றி
எவ்வுயிர்க்குந் தாயாகி இருந்தாய் போற்றி
நனிகுலவு நயினைநகர் தன்னில் வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீரூஞ்சல்

அரியதவ மகநிகமா கமமும் வாழி
தவில்குல மங்கையர்கள் கற்பும் வாழி
சைவசம யமும்மறமும் தழைத்து வாழி
பாவார்வெண் ணீறுபஞ்சாட் சரமும் வாழி
பாடியவூர் சற்றமிழும் பாரில் வாழி
நாவலர்கள் புகழ்நயினை நகரும் வாழி
நாகபர மேஸ்வரியே யாடீரூஞ்சல்.

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலாவல்லி மாலை

## *சரஸ்வதி துதி*





ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏயஉணர்விக்கும் என்னம்மை — தூய
உருப்பளிங்கு போல்வாள் என்னுள்ளத்தின் உள்ளே
இருப்பளிங்கு வாராதிடர்

வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தே வீற்றிருப்பாள் - எல்லை
அரியானத்தில் அரசரோடெம்மைச்
சரியா சனம்வைத்த தாய்

படிக நிறமும் பவளச் செவ்வாயும்
கடிகமழ்பூந் தாமரையோற் கையும் - துடியிடையும்
அல்லும் பகலும் அநவரதமும் துதித்தாற்
கல்லும் சொல்லாதோர் கவி

1. வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொலோ
சகமேழுமளித்
துண்டானுறங்க வொழித்தான் பித்தாக
வுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவை கொள் கரும்பே
சகல கலாவல்லியே.

2. நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்று மைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. அளிக்குஞ் செழுந்தமிழ் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே.

4. தூக்கும் பனுவற் துறை தோய்ந்த
கல்வியும் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வதும்
தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

5. பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்னே
நெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன் செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவி சொத் திருந்தாய்
சகல கலாவல்லியே.

6. பண்ணும் பரதமும் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும் வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்கா
யுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ் தீம்பா
லமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே.

8. சொல்விற்பனமு மவதானமுங்
கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்வாய்
நளி னாசனஞ் சேர்
செல்விக் கரிதன் றொருகால
முஞ்சிதை யாமை நல்கும்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே
சகல கலாவல்லியே.

9. சொற்கும் பொருட்கு முயிராம் மெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்
நிலந்தோய் புழைக்க
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம் புயத்தாளே
சகல கலாவல்லியே.

10. மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண்டளவிற் பணியச் செய்வாய்
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்டேனும்
விளம்பி லுன்போல்
கண்கண்ட தெய்வமுளதோ
சகல கலாவல்லியே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரஸ்வதி தேவியின் புகழ்

### *ஆனந்தபைரவி ராகம் - சாப்பு தாளம்*



வெள்ளைத் தாமரைப் பூவி லிருப்பாள்
வீணை செய்யு மொலியி லிருப்பாள்
கொள்ளை யின்பங் குலவு கவிதை
கூறுபாவல ருள்ளத்திருப்பாள்
உள்ள தாம்பொருள் தேடி யுணர்ந்தே
யோதும் வேதத்தி னுண்ணின் றொளிர்வாள்
கள்ள மற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத் துட்பொரு ளாவாள். (வெள்ளைத்) 1

மாதர் தீங்குரற் பாட்டி லிருப்பாள்
மக்கள் பேசுமழலையி லுள்ளாள்
கீதம் பாடும் குயிலின் குரலைக்
கிளியி னாவை யிருப்பிடங் கொண்டாள்
கோதகன்ற தொழி லுடைத் தாகிக்
குலவு சித்திரம் கோபுரம் கோயில்
ஈதனைத்தி னெழிலிடை யுற்றாள்
இன்பமே வடிவாகிடப் பெற்றாள். (வெள்ளைத்) 2

வஞ்சமற்ற தொழில் புரிந் துண்டு
வாழு மாந்தர் குல தெய்வமாவாள்
வெஞ்சமர்க் குயிராகிய கொல்லர்
வித்தை யோர்ந்திடு சிற்பியர் தச்சர்
மிஞ்ச நற் பொருள் வாணிகஞ் செய்வோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரமன்னர் பின் வேதியர் யாரும்
தஞ்சமென்று வணங்கிடுந் தெய்வம்
தரணி மீதறி வாகிய தெய்வம். (வெள்ளைத்) 3

தெய்வம் யாவு முணர்த்திடுந் தெய்வம்
தீமைகாட்டி விலக்கிடுந் தெய்வம்
உய்வ மென்ற கருத்துடையோர்கள்
உயிரினுக் குயிராகிய தெய்வம்
செய்வ மென்றொரு செய்கை யெடுப்போர்
செம்மை நாடிப் பணிந்திடு தெய்வம்
கைவருந்தி யுழைப்பவர் தெய்வம்
கவிஞர் தெய்வம் கடவுளர் தெய்வம் (வெள்ளைத்) 4

செந்தமிழ் மணி நாட்டை யுள்ளீர்
சேர்ந்தித் தேவை வணங்குவம் வாரீர்
வந்தனம் இவட் கேசெய்வ தென்றால்
வாழிய.்.திங் கெளிதன்று கண்டீர்
மந்திரத்தை முணுமுணுத் தேட்டை
வரிசையாக அடுக்கி யதன்மேல்
சந்தனத்தை மலரை யிடுவோர்
சாத்திரம் இவள் பூசனை யன்றாம் (வெள்ளைத்) 5

வீடு தோறுங் கலையின் விளக்கம்
வீதி தோறும் மிரண்டொரு பள்ளி
நாடு முற்றிலு முள்ளன வூர்கள்
நகர்க ளெங்கும் பலபல பள்ளி
தேடு கல்வியி லாததொ ரூரைத்
தீயினுக் கிரையாக மடுத்தல்
கேடு தீர்க்கு மமுதமெ னன்னை
கேண்மை கொள்ள வழியிவை கண்டீர் (வெள்ளைத்) 6

ஊணர் தேசம் யவனர்தந் தேசம்
உதய ஞாயிற் றொளிபெறு நாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேணகன்ற தோர் சிற்றடிச் சீனம்
 செல்வப் பாரசிகப் பழந் தேசம்
தோணலத்த துருக்க மிசிரம்
 சூழ்கடற் கப்புறத் தினிலின்னும்
காணும் பற்பல நாட்டிடை யெல்லாம்
 கல்வித் தேவி னொளிமிகுத் தோங்க (வெள்ளைத்) 7

ஞானமென்பதோர் சொல்லின் பொருளாம்
 நல்ல பாரத நாட்டிடை வந்தீர்
ஊன மின்று பெரிதிழைக் கின்றீர்
 ஓங்கு கல்வி யுழைப்பை மறந்தீர்
மான மற்று விலங்குக ளொப்ப
 மண்ணில் வாழ்வதை வாழ்வென லாமோ?
போனதற்கு வருந்துதல் வேண்டா:
 புன்மை தீர்ப்ப முயலுவம் வாரீர்! (வெள்ளைத்) 8

இன்னறுங் கனிச் சோலைகள் செய்தல்
 இனிய நீர்த்தண் சுனைக ளியற்றல்
அன்ன சத்திர மாயிரம் வைத்தல்
 அலயம் பதி னாயிர நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
 பெயர் விளங்கி யொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
 ஆங்கோ ரேழைக் கெழுத்தறி வித்தல் (வெள்ளைத்) 9

நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்
 நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்
அதுவு மற்றவர் வாய்ச்சொலருளீர்
 ஆண்மையாள ருழைப்பினை நல்கீர்
மதுரத் தேமொழி மாதர்க ளெல்லாம்
 வாணி பூசைக் குரியனபேசீர்
எதுவு நல்கியிங் கெவ்வகை யானும்
 இப்பெருந் தொழில் நாட்டுதும் வாரீர் (வெள்ளைத்) 10

திருச்சிற்றம்பலம்

-சுப்பிரமணியப்பாரதியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனைகள் அகலம் நீளத்துக்கு வீட்டுக்குள் அறைகள் கூடங்கள் வாசல்கள் முதலானவை வைப்பதற்கு இலட்சணம்

6 அடி நன்மையுண்டு
7 அடி தரித்திரம்
8 அடி இராச்சியம்
9 அடி பீடை
10 அடி பால் சாதமுண்டு
11 அடி நன்னல்
12 அடி புத்திர ஆனி
13 அடி வியாதியுண்டு
14 அடி சஞ்சலமுண்டு
15 அடி உடனே துன்பம்
16 மிகுந்த செல்வமுண்டு
17 அடி எதிரி அஞ்சி நிற்பான்
18 அடி அமர்ந்த மனை பாழாம்
19 அடி அடி சரித்திரம் புத்திர வியாதி
20 அடி இன்பத்தரும்
21 அடி நன்மை தரும்
22 அடி எதிரி அஞ்சுவான்
23 அடி தீதுண்டாம்
24 அடி மத்திமம்
25 அடி மனையாள் மரணம்
26 அடி சம்பத்துண்டாம்
27 அடி மிகுந்த செல்வமுண்டு
28 அடி தெய்வகடாட்சமுண்டு
29 அடி பால்பாக்கிய செல்வமுண்டு
30 அடி இலட்சுமி கடாட்சம் பெற்று வாழ்வர்
31 அடி துன்பமில்லை நன்மையுண்டு
32 அடி முன்னிழந்த பொருள் வரும்
33 அடி நன்மையுண்டாம்
34 அடி குடி விட்டோடும்
35 அடி இலட்சுமி கடாட்சமுண்டு
36 அடி வீரலட்சுமி கடாட்சமுண்டாம்
37அடிகன்றுகால முதலானவையுண்டாம்
38 அடி பிரம்மராட்சதன் குடியிருப்பான்
39 அடி மிகுந்த நன்மையுண்டாம்
40 அடி எதிரிகளால் எந்நேரமும் தீது
41 அடி குடும்ப சம்பத்துண்டாம்
42 அடி அஷ்டலட்சுமி குடியிருப்பான்
43 அடி நன்மை கொடாது
44 அடி கண்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டு சபிண்டிகரண ஜாப்தம்

### (வீட்டுக்கிருத்தியம்)

### இதற்கு வேண்டிய பொருட்கள் விபரம்

| | |
|---|---|
| மஞ்சள் மா | விபூதி |
| அரிசி மா | சந்தனம் |
| நெய் | குங்குமம் |
| தேன் | பட்டுத்துண்டு |
| சர்க்கரை | பால் |
| இஞ்சி | தயிர் |
| எள்ளு | பூவகை |
| அரப்பு | கற்பூரம் |
| தேசிக்காய் | சாம்பிராணி |
| பழவகை | கோசலம் |
| நல்லெண்ணெய் | கோமயம் |
| அத்தர் | வெற்றிலை |
| பன்னீர் | பாக்கு |

### புண்ணியாகம்

2 படி பச்சை அரிசி 2 தேங்காய்
வெற்றிலை, பாக்கு, பழம், பணம்

### நவசிராார்த்தம்

3 படி அரிசி, 3 தேங்காய், மரக்கறிவகை

### இடபதானம்

ஒரு நாம்பன் கன்று தட்சிணை

## அபரக்கிரியைச் சாமான் விபரம்

### (மரணக்கிரியை)

| | |
|---|---|
| மஞ்சள்மா 1பை | தேங்காய் 15 |
| அரிசி மா ¼ கிலோ | கும்ப வேட்டி |
| சம்பக் கூட்டு | குருக்கள் வேட்டி சால்வை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| வெற்றிலை — 25 | பட்டு — 3 |
| பாக்கு — 25 | சட்டி — 1 |
| வா, பழம் — 25 | முட்டி — 1 |
| பழவகை | சமித்துக்கட்டு |
| தேசிக்காய் — 3 | சந்தனக்கட்டை |
| அரப்பு | உமி |
| சில்லறைக்காசு — 5ரூபா | பால், தயிர், நெய் |
| மாவிலை | நல்லெண்ணெய் ¼ போ |
| வாழையிலை | பன்னீர் |
| பூமாலை | அந்தர் |
| நெல்மலர் (நெற்பொரி) | தேன் |
| கற்பூரம் (சூடம்) — 5 பை | இளநீர், தற்பை |
| சாம்பிராணி | விபூதி — 1பை |
| 2 தானத்துக்கு அரிசி | |
| மரக்கறிவகை | சந்தனம் |
| நெல் 5 பாடி | குங்குமம் |
| பச்சை அரிசி 2 படி | தே. எண்ணெய் |
| பயறு ½ கிலோ | தெட்சணை |
| உழுந்து ½ கிலோ | காசு |
| எள்ளு ½ கிலோ | |
| நவதானியம் | |
| நூற்பத்து 5 பெரிது | |

## ஏகோதிஷ்டம்

நல்லெண்ணெய், அரப்பு, தேசிக்காய், வேட்டி, சால்வை, குடை, பாய், தலையணை, செம்பு, விளக்கு, விசிறி, சீப்பு, கண்ணாடி, அரிசி, தேங்காய், மரக்கறிவகை, உப்பு, தூள், புளி.

## மாசிகம் 15

நல்லெண்ணெய், அரப்பு, தேசிக்காய், வேட்டி சால்வை, 15படி, அரிசி 15தேங்காய், மரக்கறிவகை உப்பு, தூள், புளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்



எங்கள் வாழ்வில் வழிகாட்டியாகத்திகழ்ந்து எம்மை எல்லாம் இடைநடுவில் எம்மை எல்லாம்மீளாத்துயரத்தில் ஆழ்திவிட்டு இறைபதம் எய்திய எங்கள் குடும்பத்தலைவி அமரர் நடேசன் லோகேஸ்வரி அவர்களின் மறைவைக் கேட்டு நேரில் வந்து ஆறுதல் கூறியவர்கும் உள்ளூரிலிந்தும் வெளிநாடுகளில் இருந்தும் தொலைபேசி மூலம் கடிதம் தந்தி மூலம் தேறுதல் தெரிவித்தவர்கும் இறுதி நிகழ்வில் பங்கு பற்றி பல வழிகளிலும் உதவிபுரிந்த உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் இன்றைய அந்தியேட்டிக் கிரிகைகளிலும் சபிண்டீகரணக் கிரியைகளிலும் பங்கு பற்றியவர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

5ம் வட்டாரம்
நெடுந்தீவு

இங்ஙனம்
குடும்பத்தினர்

ஸ்ரீ சாயி பிறிண்டேர்ஸ் - கொக்குவில். T.P:077 2209474.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வம்ச

ஆறுமுகம் + வேலாசிப்பிள்ளை

- சோமசுந்தரம்பிள்ளை (ஆசிரியர்) + கமலாம்பிகை தங்கமுத்து (ஆசிரியர்)
- * முத்துக்குமாரு
- குமாரசாமி (உ.ஓவசியர்) + மரகதம் (ஆசிரியை)
- கோபாலப்பிள்ளை + மனோன்மணி (நெசவு ஆசிரியை)
- மரகதம் + * குமாரசாமி (அஞ்சல் சேவை)
- **நடேசன் (ஆசிரியர்)** + கமலாவதி
  - பன்னகாபரன் (மனோ) + ஜெகதீஸ்வரி(றதி)
    - சுபாங்கி
    - கௌதமன்
    - சாம்பவி
    - பிரஷாத்
  - ஆனந்த
- * குழந்தைவடிவேல் (O.L.D.O ஓவசியர்)
- பரமேஸ்வரநாதன் (ஆசிரியர்) + சொர்ணலட்சுமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவழி

சின்னத்தம்பி + பராசக்தி

**லோகேஸ்வரி**

பாலசிங்கம்
+
இராபேஸ்வரி

மகாதேவன்(தொ.தொ.நிலையம்)
+
* சிவகாமி

சண்முகநாதன் (இ.போ.சபை)
+
லட்சுமி சிரோன்மணி

தில்லைநாதன்(உ.அ.அ.பணிமனை)
+
கமலாவதி

சிற்சபாநாயகி
+
* நடராஜா

கருணாமூர்த்தி
+
மீனலோஜினி - சுவிஸ்

வசந்தகுமாரி
+
வன்னியசிங்கம் (நீதிமன்றம் - ஊர்காற்றுறை)

உதயகுமார்
+
திலககுமாரி (கனடா)

தகுமாரன்(கண்ணன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்,
அது வீணாகுவதற்கு
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவனுடையதாகிறது
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்**



No: 104

ஸ்ரீ சாயி பிறிண்டேர்ஸ் – தொக்குவில். T.P:077 2209474.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org